கல்வி பொது (உயர்தர) பத்திர- உதவி கருத்தரங்கு திட்டம் - 2013
பயிற்சி வினாப்பத்திரம்

கணக்கீடு – II காலம் :- 3 மணித்தியாலம்.

தயாரிப்பு:- கல்வி அமைச்சின் வியாபார மற்றும் கணிக பகுதி

அறிவுறுத்தல் முதலாம் இரண்டாம் வினாவுடன் 6 வினாக்களுக்கு விடை தருக் வரைக்கும்

முழுப்பதிப்புரிமைக்குரியது.

1. சமானா வரையறுக்கப்பட்ட கம்பனியின் 2013.03.31 திகதி பரீட்சை மீதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட உருப்படிகள் கீழே தரப்பட்டுள்ளன.

		வரவு (ரூபா,000)	செலவு (ரூபா,000)
கூறப்பட்ட மூலதனம்(சாதாரணப்பங்குகள் 450 000)			9000
2012.04.01ல் ஒதுக்கங்கள் - பொது ஒதுக்கம்			1000
	• நிறுத்திவைக்கப்பட்ட வருவாய்		600
ஆதம், பொறி உபகரணம் -	நிலம்	2000	
	கட்டிடம்	2200	
	மோட்டார் வாகனம்	8000	
	தளபாட உபகரணம்	1700	
	கணினி	100	
2012.04.01 திரண்ட தேய்மானம் -	கட்டிடம்		220
	மோட்டார் வாகனம்		390
	தளபாட உபகரணம்		180
	கணினி		20
செலுத்திய பங்கிலாபம்		800	
பங்கீட்டுச் செலவுகள்		1250	
நிர்வாகச் செலவுகள்		1700	
ஏனைய செலவுகள்		200	
ஏனைய வருமானங்கள்			800
விற்பனைகள்			8200
விற்பனைக் கிரயம்		3500	
நிதிசெலவுகள்		60	
2012.04.01 வருமான வரி ஏற்பாடு			250
செலுத்திய வரி – 2011 / 2012 வருடத்திற்கு		300	
	2012 / 2013 வருடத்திற்கு	900	
2013.03.31 திகதியில் வரி ஏற்பாடு			400
2012.04.01 திகதியில் ஐயக் கடன் ஏற்பாடு			60

மேலதிக தகவல்கள்

1. நிர்வாகச் செலவுகள் பின்வருவன உட்படுத்தப்பட்டுள்ளன.
   இயக்குனர்(கட்டணம்) வேதனம் ரூபா. 600 000
   கணக்காய்வுக் கட்டணம் ரூபா. 50 000
   ஊழியர் வேதனம் ரூபா. 700 000

2. ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் மற்றும் தொழில் தருநர் முறையே 10%மும் 15%முமாகும். ஊழியர் சார்பானவை மட்டுமே சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளன. தொழில் தருனர் சார்பாக இன்னும் பதிவுகள் எதுவும் இடம்பெறவில்லை.

3. 2013.03.31 திகதி 3 500 000/= காசு விலையிலான மோட்டார் வாகனமொன்று கம்பனியானது குத்தகை அடிப்படையில் பெற்றுள்ளது. ஆரம்ப தொகை 500 000 செலுத்தப்பட்டு அது மோட்டார் வாகன கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. 720 000/= படி முதல் வருடாந்த தவணைக்கட்டணமானது ஐந்து மோட்டார் வாகனங்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டு குத்தகைக்கடன் கணக்கில் செலவு வைக்கப்படுள்ளது.

4. வருடத்தில் காணியானது மீள்மதிப்பீட்டு இலாபம் ரூபா 300 000/= தொடர்பாக பதிவுகள் இடம்பெறவில்லை.

5. 2012.10.01இல் ரூபா. 200 000/= கிரயமுள்ளதும் ரூபா. 180 000/= தேறிய பெறுமதியைக் கொண்டதுமான உபகரணமொன்று ரூபா. 100,000/= வுக்கு விற்பனை செய்யப்பட்டு காசோலையானது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு உபகரணங்கள் கணக்கில் செலவு வைக்கப்பட்டது தவிர வேறெந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

6. வருட காலத்தில் வாடிக்கையாளர் ஒருவர், கம்பனிக்கு எதிராக 200 000/= நட்டஈட்டைக் கோரி தொடுக்கப்பட்ட வழக்கொன்று நடைபெறுகின்றது. செலுத்துமதியான நட்டஈடு தொடர்பாக நம்பகரமாக உறுதிப்படுத்த முடியாதுள்ளது என சட்ட வல்லுநர்கள் எடுத்துரைத்துள்ளனர். கோரப்பட்ட நட்டஈட்டுத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு அது ஏனைய செலவுகளில் உட்படுத்தப்பட்டுள்ளது.

7. 2013.01.01 இல் கம்பனியானது ஒவ்வொன்றும் 20/= வீதம் 50 000 உபகாரப்பங்குகளை, பொது ஒதுக்கத்தைப் பயன்படுத்தி வழங்கியுள்ளது. அதற்கான எப்பதிவுகளும் கணக்கேடுகளில் இடம் பெறவில்லை.

8. உபகாரப்பங்குகளை வழங்குவதற்கு முன்னமுள்ள பங்குகளுக்கு பங்கொன்றிற்கு 02/= படி பங்கு இலாபம் ஒன்றை வழங்குவது என பிரேரிக்கப்பட்டது.

9. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் மீது பிள்வருமாறு தேய்மானம் இடப்படல் வேண்டும்

கட்டிடம்	5%
தளபாட உபகரணங்கள்	5%
மோட்டார் வாகனம்	10%
கணினி	20%

10. அறவிடமுடியாக்கடனாக பதிவழிக்கப்பட்ட தொகை 30 000/= பங்கீட்டு செலவுகளில் உட்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஐயக்கடன் ஏற்பாட்டிற்கான 50 000/= தொடர்பாகபதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

தேவைப்படுவன:

1. 2013.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்று
2. 2013.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றுக் கூற்று.
3. 2013.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்றுக்கான குறிப்புகள்
4. 2013.03.31 திகதியில் நிதி நிலைமை கூற்றில் காட்டுவதற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான குறிப்பு.

2. (அ) வரையறுக்கப்பட்ட லியோனி கம்பனியின் தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

(I) தெரிவு செய்யப்பட்ட கணக்குகளின் மீதிகள்

உருப்படிகள்	2013.03.31 (ரூபா. 000)	2013.03.31 (ரூபா. 000)
இருப்பு	8500	7000
கடன்பட்டோர்	7200	9000
கடன்கொடுத்தோர்	13000	14000
அட்டுறு கடன் வட்டி	600	200
அட்டுறு வருமான வரி	500	200
நீண்டகால கடன்	15000	18000
கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்கு	29500	19500
நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்	8000	5000
காசும் காசுக்கு சமமானவையும்	9000	2000

(II) 2013.03.31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமாக் கூற்றின் பிரித்தெடுக்கப்பட்டவை சில கீழே தரப்பட்டுள்ளன.

	(ரூபா. ,000)
தேய்வு	3000
வட்டிச் செலவு	2250
வருமான வரி	1800
உபகரணங்கள் விற்ற இலாபம்	500

(iii) வருடத்தில் செலுத்திய பங்கிலாபம் ரூபா 750,000/=

(iv) அனைத்து கொள்வனவுகளும் விற்பனைகளும் கடன் அடிப்படையில் நடந்தேறின.

(v) 2013.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் 800,000/= பெறுமதியான மோட்டார் வாகன மொன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2,000,000/= தேறிய பெறுமதியுடைய உபகரணங்கள் விற்பனை செய்யப்ப்டுள்ளன. இதனைத் தவிர நடைமுறையல்லா சொத்துக்கள் கொள்வனவு செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ இல்லை.

(vi) நடப்பாண்டில் உபகாரப்பங்குகள் வழங்கப்படவில்லை.

தேவைப்படுவன:

1. 2013.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று.
2. தேறிய இலாப விகிதம்
3. வட்டிக் காப்பு விகிதம்
4. கடன்பட்டோர் புரள்வு விகிதம்
5. கடன் வசூல் காலம்
6. இருப்பு புரள்வு விகிதம்

(ஆ) ஒரு வகை பொருடட்களை உற்பத்தி செய்து விநியோகிக்கும் வரையறுக்கப்பட்ட நவோதா கம்பனி சர்வதேச பாவனைக்கு தயாரித்து வழங்கும் கீழே தரப்பட்டுள்ளது.

		ரூபா. ‘000
விற்பனைகள்		20,000
கழி: மாறும் கிரயம் - உற்பத்தி	6000	
- உற்பத்தியல்லாதவை	1000	7000
பங்களிப்பு		13000
கழி: நிலையான கிரயம் - உற்பத்தி	4000	
- உற்பத்தியல்லா	2500	(6500)
		6500

மேலதிக தகவல்: உத்தேச விற்பனை அலகுகள் 10,000

தேவைப்படுவன:

1. பங்களிப்பு விற்பனை விகிதம்
2. இலாப நட்டமற்ற புள்ளியில் விற்பனைப் பெறுமதி எவ்வளவு?
3. இலாப நட்டமற்ற புள்ளியில் விற்பனைக்கு மேலதிகமாக அலகொன்றால் வருமானம் எவ்வளவு?
4. 7150/= இலாபமொன்றைப் பெறுவதற்கு விற்பனை செய்ய வேண்டிய பெறுமானம் எவ்வளவு?

(புள்ளி 05)

(மொத்தப்புள்ளி 20)

3. கனிஸ்காவும் அனுஸ்காவும் பங்காளர்களாவர். 2012.12.31 திகதி நிதியாண்டு முடியும் அன்று பங்குடமையில் தாருக்கா எனும் புதிய பங்குதாரர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்

(1) பங்குடமை ஒப்பந்தம் பின்வருமாறு

	கனிஸ்கா மற்றும் அனுஸ்கா பங்குடமை	கனிஸ்கா, அனுஸ்கா மற்றும் தாருக்கா பங்குடமை
இலாப பகிர்வு விகிதம்	3:2	5:3:2
மாதாந்த சம்பளம்(ரூபா)		
கனிஸ்கா	5000	6000
அனுஸ்கா	4000	5000
தாருக்கா	-	4000
வருடாந்த மூலதனத்தின் மீது வட்டி வீதம்	10%	10%

- தாருக்கா மூலதானமாக ரூ 400,000 அறிமுகப்படுத்தினான் அது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை
- நன்மதிப்பு ரூ 600,000 என மதிப்பீடு செய்யப்பட்டது. இது மூலதன கணக்குகளுக்கூடாக, சீராக்கம் செய்யப்படல் வேண்டும்.

(ii) 2012.01.01 திகதி மீதிகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

பங்காளர்களின் மொத்த உரிமையான்மை	-கனிஸ்கா	850
	-அனுஸ்கா	560
பங்குதாரர் மூலதன கணக்கு மீதி	-கனிஸ்கா	700
	-அனுஸ்கா	600
தேய்மானம் ஏற்பாடு	-கட்டடம்	150
	-மோட்டார் வாகனம்	300
	-இயந்திரம்	60
2012.05.01 கடன் மூலதனம்	-கனிஸ்கா	240

(iii) 2012.12.31 இல் முடிவடைந்த வருடத்தில் கணிப்பீடு செய்யப்பட்ட தேறிய இலாபம் ரூ 960,000 ஆகும். 2012.12.31 திகதியில் தயாரிக்கப்பட்ட பரீட்கை மீதியிலுள்ள உருப்படிகள் பிள்வருமாறு

	ரூபா '000
வியாபார கடன் கொடுத்தோர்	130
வங்கிக் கடன்	200
வங்கி மேலதிக பற்று	20
காணி மற்றும் கட்டடம்(காணி 500)	1700
பொறி உபகரணம்	400
மோட்டார் வாகனம்	800
இருப்பு சரக்கு	245
கடன்பட்டோர்	180
முதலீடுகள்	140
பற்றுக்கள் - கனிஸ்கா	60
- அனுஸ்கா	45
காசு	100

(iv) பின்வரும் தகவல்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1. ரூ.25000 கொள்வனவு பட்டியல் ஒன்றும் ரூ.30,000 விற்பனை பட்டியலொன்றும் புத்தகங்களில் இருந்து விடுபட்டிருந்தது
2. 2012.12.31 திகதியில் உள்ளவாறான பொருட்களின் இருப்பில் ரூ85,000 கிரயமுடைய ஒரு பகுதி சரக்கு பழுதடைந்த நிலையில் உள்ளன. அதனை ரூ60, 000 விற்பனை செய்யமுடியும் என மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்கான சீராக்கங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.
3. அனுஸ்காவுக்கு சொந்தமான கட்டிடமொன்றில் வியாபார நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. மாதாந்த வாடகை ரூ. 15,000 ஆகும். அது அட்டுறுவாகவுள்ளது.
4. 2013 வருடத்திலிருந்து கடன் வட்டியுடன் மாதாந்தம் ரூ. 5000 கடன் திருப்பி செலுத்தப்படல் வேண்டும்.
5. 2012 செப்டம்பர் மாதம் வங்கியிலிருந்து பெறப்பட்ட வங்கிகூற்றின் படி பின்வருவன வங்கி கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

    - அறவிடப்பட்ட வங்கி கட்டணம் ரூ 2,000
    - கடன்பட்டோரிடமிருந்து நேரடியாக பெற்றது ரூ 35,000
    - முதலீட்டு வருமானம் பெற்றது ரூ 13,000
    - நிலையான கட்டளையின் படி வங்கியில் அறவிடப்பட்ட வங்கிக்கடன் தவணைக் கட்டணம் ரூ 18,000(இதில் ரூ 8000 வங்கிக் கடன் வட்டியாகும்.)

6. நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்மானம் மேற்கொள்ளப்படும்.

கட்டிடம்(கிரயத்தில்)	10%
மோட்டார் வாகனம் (தேறிய பெறுமதியில்)	10%
இயந்திரம் (கிரயத்தில்)	20%

7. கனிஸ்கா தனது சொந்தப் பணத்திலிருந்து ரூ30,000 வியாபாரத்தின் காப்புறுதிக்காக செலுத்தினான். இத்தொகை மீளசெலுத்தப்படல் வேண்டும். இதற்கான பதிவுகள் இடம் பெறவில்லை.

தேவைப்படுவன:

1) 2012.12.31 இல் முடிவடைந்த வருடத்தில் பகிர்வதற்கான தேறிய இலாபம்.
2) 2012.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய இலாபத்தை பகிர்வு செய்தல்
3) நிரல் வடிவில் பங்காளர் நடைமுறைக் கணக்கு
4) நிரல் வடிவில் பங்காளர் மூலதனக் கணக்கு
5) 2012.12.31 இல் ஐந்தொகை

(20 புள்ளிகள்)

4. (அ) சுபுன் உற்பத்தி நிறுவனத்தின் ஊழியர்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- நிறுவனத்தில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 20 ஆகும்.
- தினமும் நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்கள் சேவைப் புரிதல் வேண்டும்.
- மாதாந்தம் 20 நாட்கள் வேலைநாட்களாகும்.
- ஒரு ஊழியருக்கு மணித்தியாலமொன்றுக்கு ரூ.200 சம்பளம்(கூலி)
- 20 நாட்கள் தொடர்ச்சியாக வேலைக்கு சமூகமளித்தவருக்கு மேலதிகப் படி ரூ500 ஆகும்.
- மேலதிக நேர சம்பளம் சாதாரண மணித்தியால கூலியின் 150% ஆகும்.
- அடிப்படை சம்பளத்திலிருந்து ஊழியர் சேமலாபநிதிக்கு தொழில் கொள்வோர் 15ூயும் தொழிலாளர் 10ூ மும் பங்களிப்பு செய்வர்
- ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3ூ ஆகும்.

2013.03.31 திகதியில் முடிவடைந்த மாதத்திற்கான சம்பள கொடுப்பனவு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

- இந்த நிறுவனத்தின் ஊழியர்களால் இம்மாதத்தில் 4000 மணித்தியாலங்கள் சேவையாற்றப்பட்டுள்ளது.
- 10 ஊழியர்கள் தொடர்ச்சியாக 20 நாட்கள் சேவைபுரிந்துள்ளனர்.
- தொழில் சங்கத்திற்காக ஒவ்வொரு ஊழியர்களிடம் இருந்தும் மாதாந்தம் ரூ100 கழிப்பனவு செய்யப்படும்.
- ஊழியர்களில் 12 பேர் நிறுவனத்தின் இருப்பிட வசதியை பெற்றுக் கொள்வதால் மாதாந்தம் 2000/= அவர்களிடம் இருந்து அறவிடப்படும்.
- 2013.03.31 திகதியில் முடிவடைந்த மாதத்தில் நிறுவனத்தின் ஒருவரான சச்சின் நிறுவனத்தின் இருப்பிட வசதியை பயன்படுத்தியதுடன் 20 நாட்கள் தொடர்ச்சியாக சேவையாற்றியுள்ளார். அவர் மாதத்தில் 200 மணித்தியாலங்கள் சேவை புரிந்துள்ளார்.

தேவைப்படுவன:

1) ஊழியும் சம்பளங்களும் கட்டுப்பாட்டுக் கணக்கு
2) தொழிற்சங்க சந்தா கணக்கு
3) இருப்பிட வசதி வருமான கணக்கு
4) ஊழியர் சேமலாப நிதி பொறுப்புக் கணக்கு
5) ஊழியர் நம்பிக்கை நிதி பொறுப்புக் கணக்கு
6) ஊழியர் சச்சினின் சம்பளப்பட்டியல் (2013 மார்ச் மாதத்திற்குரியது) (7 புள்ளிகள்)

(ஆ) "நியோ" உற்பத்தி நிறுவனம் தனது உற்பத்திக்கு பொருத்தமாக உற்பத்தி பகுதி 2உம், சேவை நிலையம் ஒன்றையும் நடாத்தி வருகின்றது.

பொது மேந்தலைக் கிரயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நேரிற் கூலி -	உற்பத்திப் பகுதி x		ரூபா. 235,000
•	உற்பத்திப் பகுதி y		ரூபா. 125,000
	சேவைப்பகுதி		ரூபா. 80,000
மின்சார செலவுகள்		ரூபா. 80,000	
தொழிற்சாலை வாடகை		ரூபா. 50,000	
பொறி காப்புறுதி		ரூபா. 30,000	
ஊழியர் காப்புறுதி		ரூபா. 20,000	
பொறி தேய்மானம்		ரூபா. 60,000	
ஊழியர் நலன்		ரூபா. 40,000	280,000
			720,000

பின்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன.

பகுதி	பொறி இயந்திரம்	மீட்டர் (பரப்பளவு)	ஊழியர்	இயந்திர மணி	நேர்க் கூலி மணி
உற்பத்திப் பகுதி x	300,000	600	20	14000	4000
y	200,000	300	20	5000	6000
சேவை பகுதி	100,000	100	10	-	-

சேவைப் பகுதியின் அறிக்கையின்படி உற்பத்திப் பகுதிக்கு வழங்கிய சேவை மணித்தியாலங்கள்

x உற்பத்திப் பகுதி - 80 மணித்தியாலங்கள்
y உற்பத்திப் பகுதி - 40 மணித்தியாலங்கள்

தேவைப்படுவன

1) ஒவ்வொரு உற்பத்தி மற்றும் சேவை பகுதிக்கான பொது மேந்தலை பகிர்வு.
2) சேவைப்பகுதியின் கிரயத்தை உற்பத்திப் பகுதிகளுக்கு பகிர்வு செய்தல்

3) பொது மேந்தலை உறிஞ்சல் வீதம்

ஒ – பகுதி இயந்திர மணித்தியாலங்கள்
ல – பகுதி நேர் உழைப்பு மணித்தியாலங்கள்

(8 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

5. (அ) பவித்ரா நிறுவனம் வழமையாக மார்ச் 31 இல் கணக்கேடுகளை மூடும் நிறுவனத்தின் பொறி இயந்திரம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பொறி வகை	கொள்வனவுத் திகதி	கிரயம்	இறுதிப் பெறுமதி	பயன்தரு ஆயட்காலம் (வருடங்கள்)
இயந்திரம் A	2009.04.01	445000	45000	8
இயந்திரம் B	2010.01.01	510000	30000	5
இயந்திரம் C	2010.04.01	300000	இல்லை	6
இயந்திரம் D	2012.01.01	275000	35000	4

- அனைத்து பொறி இயந்திரங்களும் நேர் கோட்டு முறையில் தேய்மானம் இடப்படும்
- 2012.07.01 திகதி பொறி இயந்திரம் பொடர்பாக பின்வரும் மாற்றங்கள் ஏற்பட்டன.
    1. இயந்திரம் A 285 000 ரூபாவுக்கு விற்கப்பட்டது
    2. இயந்திரம் B மீது ரூ60,000 பெறுமதியான உதிரிப்பாகம் ஒன்று பொறுத்தப்பட்டமையால் அதன் பயன்தரு ஆயட்காலம் இன்னும் மூன்றே வருடங்களாக நீடிக்கும். இறுதி பெறுமதி ரூ.12,000ஆல் அதிகரிக்கும்.
    3. இயந்திரம் ரூ.200,000 பெறுமதியில் பகுதிமாற்றாக கொடுக்கப்பட்டும் மேலதிகமாக காசு 120,000வும் செலுத்தப்பட்டு புதிய இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. இதன் பயன்தரு ஆயட் காலம் 5 வருடங்களாகும்.
    4. பொறி இயந்திரம் னு முற்றாக சேதமுற்றதால் அதனை புத்தகங்களில் இருந்து நீக்குவது என தீர்மானிக்கப்பட்டது.

தேவைப்படுவன

1. 2012.03.31 முடிவடைந்த வருடத்திற்காக பொறியியந்திரங்கள் தொடர்பாக வருமான கூற்றில் உட்படுத்த வேண்டிய பெறுமான தேய்வு (தனிதனியாக)
2. அனைத்து இயந்திரங்கள் சார்பாக ஒரு இயந்திரக் கணக்கும் பொறியியந்திர பெறுமான கணக்கும் பேணப்படுகிறது.
    1) இயந்திரக் கணக்கு
    2) இயந்திர தேய்மானக் கணக்கு
    3) பொறி அகற்றும் கணக்கு(பகுதிமாற்று உட்பட)

(08 புள்ளிகள்)

(ஆ) வியாபாரி ஒருவரின் 2013.03.31இல் முடிவடைந்த அரையாண்டுக்கான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

சொத்துக்களும் பொறுப்புகளும்	2012.07.01 (ரூ.'000)	2012.12.31 (ரூ.'000)
வங்கிக்கடன்	500	450
வியாபார இருப்புக்கள்	300	880
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	3700	4000
வியாபாரக் கடன் கொடுத்தோர்	700	900
வியாபாரக் கடன் பட்டோர்	250	550
காசு	460	725
12% முதலீடுகள்		400

காசு பெறுவனவும் கொடுப்பனவும்

கடன் கொடுத்தோருக்கு செலுத்தியது	2700
பல்லின செலவுகள்	427
தளபாட கொள்வனவு	500
முதலீட்டு வருமானம் பெற்றது	12

பொருத்தமான தகவல்கள்

- முதலீடுகள் 2013.08.11 திகதியில் கொள்வனவு செய்யப்பட்டன.
- வங்கிக்கடன் வட்டி 45,000/= அட்டுறுவாகவுள்ளது
- 2012.12.31 திகதியில் உள்ளவாறான வங்கிக்கடன் அடுத்துவரும் மூன்று சமமான தவணைகளில் செலுத்தப்படல் வேண்டும்.
- அனுமதித்த கழிவுகள் ரூ120,000 ஆகும்.
- விற்பனை கிரயத்தில் 25% ஐ இலாபமாக கூட்டி விற்பனைவிலை நிர்ணையிப்பது கொள்கையாகும்.
- முதல் காசேட்டில் ஏதேனும் பற்றாக்குறை(வேறுபாடு) இருப்பின் அது மேலதிக மூலதனமாக அல்லது பற்றாக கருதப்படல் வேண்டும்.

தேவைப்படுவன:

2012.12.31 இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கான உழைக்கப்பட்ட இலாபம் / நட்டம்

2012.12.31 திகதியில் உரிமையாண்மை நடைமுறை அல்லாப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள்.

(07 புள்ளிகள்)
(மொத்தப் புள்ளிகள் 15)

6. (அ) டிம்பில் டென்னிஸ் விளைாட்டுக் கழகம் 2011. 12. 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான பெறுவனவுக் கொடுப்பனவுக் கணக்கைப் பின்வருமாறு காட்டியது.

மீதி மு.கொ.வ	46,000	மைதான பராமரிப்புச் செலவு	10,000
வருடாந்த அங்கத்துவ கட்டணம்	29,400	சிற்றுண்டிச்சாலை உணவு	40,000
சிற்றுண்டிச்சாலைப் பெறுவனவு	130,000	தொடர்பாடல் செலவுகள்	12,000
மைதான வாடகைப் பெறுவனவு	100,000	சம்பளங்கள்	180,000
ஆயட் சந்தாப்பணம்	60,000	எழுதுகருவிகள்	8,000
		சிற்றுண்டிச் சாலை செலவுகள்	7,000
		அச்சடித்தற் செலவுகள்	8,000
		விளையாட்டுப்போட்டி செலவு	12,000
		பத்திரிகைச் செலவு	5,000
		மீதி கீ/கொ/செ	83,400
	365,400		365,400
மீதி கீ/கொ/வ	83,400		

2011. 01. 01 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வருமாறு

விளையாட்டு உபகரணங்கள்	80,000
விளையாட்டு மைதானம்	300.000
தளபாட உபகரணங்கள்	60,000
விளையாட்டரங்கு	200,000
வங்கிக்கடன்	300,000

ஏனைய தகவல்கள் வருமாறு

1. ஆயள் அங்கத்துவ சந்தா 2011. 01. 01 ஆம் திகதி தொடக்கம் பெறப்பட்டு அது 10 வருடங்களில் சமமான தொகைகளாகப் பகிரப்படும் என்பது விளையாட்டுக் கழகத்தின் கொள்கையாகும்.
2. வருடாந்த அங்கத்துவ சந்தா 600.'.ஸ்ரீ வருடாந்த சந்தா ரூபா 6000.'.ஸ்ரீ ஆகும். கழக அங்கத்தவர் எண்ணிக்கை 60 ஆகும். இதில் 10 பேர் ஆயட் சந்தாதாரராவர்
3. 2010 ஆம் வருடத்திற்குரிய 6000 ரூபாவையும் 2012 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 3000 ஐயும் அங்கத்துவக் கட்டணம் உள்ளடக்கியுள்ளது.
4. டீம்பில் விளையாட்டுக் கழகம் தமது அங்கத்தவர்களுக்காக சிற்றுண்டிச்சாலை ஒன்றை நடாத்திவருகின்றது. 2011. 01. 01 ஆம் திகதி உணவுப்பொருள் இருப்பு ரூபா 10,000 ஆக இருந்தது. 2011. 12. 31 இல் உணவுப் பொருள் இருப்பு ரூபா 8,000 ஆகும். தளபாட உபகரணங்கள் ரூபா 50,000 ஆகும்.
5. சும்பளப் பகுப்பாய்வு வருமாறு

சிற்றுண்டிச்சாலை ஊழியர்	40.000
விளையாட்டுப் பகுதி பொறுப்பாளர்-ஐ	40,000
விளையாட்டுப் பகுதி பொறுப்பாளர்-ஐஐ	40,000
மைதான ஊழியர்	60,000

தேவைப்படுவன

1. 2011. 01. 01 திகதியில் ஐந்தொகை
2. 2011. 12. 31 திகதியன்று ஆயுள் அங்கத்துவ சந்தா
3. 2011. 12. 31 திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான சிற்றுண்டிச் சாலைக் கணக்கு
4. 2011. 12. 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானம்

ஆ) நிறுவனமொன்று பாவனையிலுள்ள இயந்திரமொன்றை அகற்றிவிட்டு புதிய இயந்திரமொன்றை கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. புதிய மற்றும் பழைய இயந்திரங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன

புதிய இயந்திரம்

கோள்வனவுக் கிரயம்	1200,000
நிறுவுதற் செலவு	100,000
இறுதிப் பெறுமதி	200.000

பழைய இயந்திரம்

06 வருடங்களுக்குமுன் கிரயம்	600,000
பயன்தரு ஆயட்காலம்	08 வருடங்கள்
நிகழ்கால சந்தைப் பெறுமதி	300,000

- சேயற்திட்டத்தின் ஆரம்பத்தில் தொழிற்படு மூலதனம் ரூபா 80,000 இலிருந்து ரூபா 120,000 ஆக அதிகரிக்கும்
- இறுதி ஆண்டில் தொழிற்படு மூலதனத்தை மீளப்பெறலாம். புதிய இயந்திரம் இறுதிப் பெறுமதி 4 வருடங்களாகும். வருடத்தில் தேறக்கூடியதாகும்.
- 04 வருடங்களில் எதிர்பார்க்கப்பட்ட இலாபமும் 15.'. கழிவு காரணியின் பொறுமானங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

வருடம்	1	2	3	4
தேறிய இலாபம்	180,000	120,000	140,000	160,000
15மூ கழிவுக் காரணி	0.87	0.76	0.66	0.57

தேவைப்படுவன

1. இயந்திரத்தின் ஆரம்ப முதலீட்டுக் கிரயம்.
2. புதிய இயந்திரத்திற்கான தேறிய நிகழ்கால பெறுமதி

3. இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதா? ஆல்லது இல்லையா என்பதுபற்றிய உமது ஆலோசனை (புள்ளிகள் 06)

மொததப் புள்ளிகள் 15

7. அ) ''சுமோ'' நிறுவனத்தின் 2013. 01. 01 திகதியில் உள்ளவாறான ஐந்தொகை வருமாறு

பொறி உபகரணங்கள் - கிரயம்	3000,000
பொறி மீதான பெறுமானத் தேய்வு ஏற்பாடு	36,000
வியாபார கடன்பட்டோர்	60,000
ஐயக்கடன் ஏற்பாடு	6,000
சரக்கிருப்பு	45,000
கையிலுள்ள காசு	85,000
வங்கிக் கடன்	124,000
கடன்கொடுத்தோர்	60,000
வங்கி மேலதிக பற்று	14,000

2013 ஜனவரி மாதத்திற்கான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ள

1. ரூபா 18,000 கிரயமுள்ள பண்டங்கள் ரூபா 35,000 விற்கு விற்பனை செய்யப்பட்டு ரூபா 20,000 காசு பெறப்பட்டது.
2. கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்டு 2012. 12. 28 இல் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 8,000 ற்கான காசோலை மதிப்பிழந்தது பற்றிய பதிவுகள் கணக்கேடுகளில் இடம்பெறவில்லை
3. பொறி இயந்திரங்கள் மீது அவற்றின் கிரயத்தில் 12மூ இல் தேய்மானம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.
4. ரூபா 4,000 கிரயமுள்ள பொருட்கள் வழங்குநருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் அதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.
5. 2013 ஜனவரி மாதத்திற்கான பெறப்பட்ட மின் பட்டியல் ரூபா 7,500 ஆகும்.
6. 2013 ஜனவரி மாதத்திற்கானரூபா 6,500 வங்கிக்கடன் தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. ஆதில் ரூபா 1,500 கடன் வட்டி ஆகும்.
7. 10மூ கழிவு நீக்கி கடன் கொடுத்தோருக்கு கொடுத்த காசு 13,500 ஆகும்.
8. 2013. 03. 31 ஆம் திகதி உள்ளவாறான கடன்பட்டோர் மீதியில் 5மூ த்திற்கு ஐயக்கட்ன் ஏற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். ஜனவரி மாதத்திற்கான

தேவைப்படுவன

1. 2013. 01. 01 திகதியில் உள்ளவாறான மீதிகளை பின்வரும் சமன்பாட்டில் காட்டுக உரிமையாண்மை ␣ பொறுப்பு ஶ்ரீ சொத்து
2. ஜனவரி மாதத்தில் நடந்தேறிய கொடுக்கல் வாங்கல்கள் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் காட்டுக. குறையுமாயின் - அல்லது ( ) எனக் காட்டுக.
3. கொடுக்கல் வாங்களினால் எழக்கூடிய தாக்கத்தின் பின்னர் 2013 ஜனவரி மாதத்திற்கான உழைக்கப்பட்ட டீதேறிய இலபாம் அல்லது தேறிய நட்டத்தைக் கணிப்பிடுக

(ஆ) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் ''துமாரி'' வியாபாரத்திற்குரியனவாகும்.

- பண்டகசாலை (களஞ்சியசாலை) இயலளவு 12000 அலகுகள்
- வருடமொன்றிட்கான சரக்கின் கேள்வி 30000 அலகுகள்
- வருடாந்தம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டளைகளின் எண்ணிக்கை 10
- மாதமொன்றிட்கான ஆகக்குறைந்த பொருள் பாவனை 200 அலகுகள்
- மாதமொன்றில் நுகரப்படும் சராசரி அலகுகள் 300
- மீள் கட்டளைக் காலம் 10 – 25 நாட்கள்

தேவைப்படுவன

I. மீள் கட்டளைத் தொகைப
II. மீள் கட்டளை மட்டம்
III. உச்ச இருப்பு மட்டம்
IV. உச்ச இருப்பு மட்டத்தைநோக்கி ஈர்த்தல் தொடர்பாக உமது ஆலோசனையைத் தருக
V. மாதமொன்றிற்கான உச்ச பாவனை 700 ஆக இருப்பின் பண்டகசாலையின் இயலளவு போதுமானதா?

***